Kanton Bern
Canton de Berne

hallo–bern.ch
salut–berne.ch

# ஆபத்துகளும் ஆலோசனைகளும்

அவசர இலக்கங்கள்
ஆலோசனை நிலையங்கள்

# அவசர இலக்கங்கள்

அவசர இலக்கங்கள் தினமும் 24 மணிநேரமும் தொடர்பு கொள்ளக்கூடியவை. குறுகிய இலக்கங்கள் (3 இலக்கங்கள் ) இலவசமானவை. மற்றைய இலக்கங்களுக்கு சாதாரண தொலைபேசிக்குரிய கட்டணமே அறவிடப்படும்.

## பொதுவான அவசர இலக்கம்: 112

இந்த இலக்கத்துடன் பொலிஸ் அவசர நிலையத்திற்கு தொடர்பு கொள்ளலாம். அவசரத்தின் வகையையும் விதத்தையும் பொறுத்து பொலிஸே மற்றைய இடங்களுடன் தொடர்பை ஏற்படுத்திவிடும். (உ+மாக தீயணைப்புப்படை).

## பொலிஸ்: 117

இந்த இலக்கத்துடன் பொலிஸ் அவசர நிலையத்திற்குத் தொடர்பு கொள்ளலாம்.

## தீயணைப்புப்படை: 118

இந்த இலக்கத்துடன் தீயணைப்புப்படை நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## முதல் உதவி / பாதுகாப்புச்சேவை: 144

இந்த இலக்கத்தில் பாதுகாப்புச்சேவையின் செயற்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம். இந்த 144 இலக்கத்தில் உடனடி அம்புலன்ஸ் தேவைக்கோ அல்லது ஆபத்தின் தீவிரத்தை அறியமுடியாமலிருந்தாலோ (உதாரணமாக விபத்தின் பின்பு ) தொடர்பு கொள்ளலாம்.
மற்றைய மருத்துவப்பிரச்சனைகளுக்கு முதலில் குடும்பவைத்தியரைத் தொடர்பு கொள்ளவேண்டும். சிகிச்சை நிலையம் திறந்திருக்காத நேரங்களில் எப்போதும் ஒரு குடும்பவைத்தியர் அவசரசேவை இயங்கும். யார் அவசரசேவை வைத்தியர் என்பது குடும்பவைத்தியரின் தொலைபேசி அழைப்பை எடுத்தால் அதில் பதியப்பட்டோ அல்லது பிரதேசச் செய்தியிலேயோ அறியலாம். அதைவிட மாநில அவசர எண் 0900 576 740 (கவனம்: கட்டணத்திற்குரியது. 1.98/நிமி). இலும் அறியலாம். இங்கு மருத்துவ ஆலோசனையும் சரியான அருகிலுள்ள இடமும் (வைத்தியர், வைத்தியசாலை) வழிகாட்டப்படும். தாமே ஒரு அவசர சிகிச்சைக்கு (வைத்தியசாலை/ அவசர சிகிச்சை) தேடிச் செல்வதும் சாத்தியப்படலாம்.

## அவசர மருந்தகம்

வழக்கமான திறக்கும் நேரத்திற்கு புறம்பாக திறந்து மருந்துகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சில பிராந்திய அவசர மருந்தகங்கள் உள்ளன. இந்த மருந்தகங்கள் அவசர காலங்களுக்கு கட்டணம் வசூலிக்கின்றன (இரவு அல்லது சேவை கூடுதல் கட்டணம்). அவசர மருந்தகத்தின் சேவைகள் வழக்கமாக உடனடியாகவும் பணமாகவும் செலுத்தப்பட வேண்டும்.

## அவசரப் பல்வைத்தியர்

பல் விபத்து அல்லது பல்வலி ஏற்பட்டால், அவசர பல் மருத்துவர்கள் வழக்கமான திறக்கும் நேரத்திற்கு வெளியே பணியில் உள்ளனர். இரவு 8 மணி முதல் காலை 7 மணி வரை சிகிச்சைக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நீங்கள் அவர்களை அழைக்கும் போது சரியான தொகையைப் பற்றி விசாரிக்கலாம். சேவைகள் பொதுவாக ரொக்கமாக செலுத்தப்படுகின்றன.

## நஞ்சு - அவசரம்: 145

யாராவது நஞ்சை விழுங்கினால் அல்லது சந்தேகப்பட்டால் இந்த இலக்கத்தில் உள்ள வைத்தியர்களும் நிபுணர்களும் உதவுவார்கள். அவர்கள் நஞ்சுபட்டால் என்ன செய்யும் என விளக்கம் தருவார்கள். உயிராபத்தானநிலையில் இருந்தால் உடனடியாக 144 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். இணையத்தளப் பகுதியில் நஞ்சு /நஞ்சூட்டல் பற்றிய விபரமான தகவல்களைக் காணலாம்.

## வளர்ந்தவர்களுக்கான ஆலோசனை: 143

தொலைபேசி இலக்கம் 143 (உதவும் கரங்கள், Dargebotene Hand) இல் யாராவது தம் பிரச்சனைகள் எந்த வகையாக இருந்தாலும் அவை பற்றி யாருடனும் பேச விரும்பினால் (டொச். பிரெஞ்.இத்தாலி மொழிகளில் ) பேசலாம். நெருக்கடியான சூழ்நிலைகளிலும் கவலையான கடினமான சந்தர்ப்பங்களிலும் தொடர்பு கொள்ளலாம். இங்கு பேசப்படுவது நம்பகமானது. அநாமதேயமானது. விரும்பினால் மட்டும் பொருத்தமான உதவிகள் வசதிகள் பற்றிய தகவல்களைப் பெறலாம். இங்கு ஈ - மெயில் மூலமோ அல்லது அரட்டை மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

## சிறுவர்கள் ௲ இளையவர்களுக்கான ஆலோசனை: 147

தொலைபேசி இலக்கம் 147 இல் சிறுவர்களும் இளையவர்களும் தம் பிரச்சனைகள் எந்த வகையாக இருந்தாலும் அவை பற்றி யாருடனும் பேச விரும்பினால் (டொச். பிரெஞ்.இத்தாலி மொழிகளில் ) பேசலாம். நெருக்கடியான சூழ்நிலைகளிலும் கவலையான கடினமான சந்தர்ப்பங்களிலும் தொடர்பு கொள்ளலாம். எந்நேரமும் நிபுணர்களைத் தொடர்பு கொள்ளலாம்.இங்கு பேசப்படுவது நம்பகமானது. அநாமதேயமானது. ஈ மெயில் குறுஞ்செய்தி அல்லது அரட்டை மூலம் தொடர்பு கொள்ளலாம்.

## பெற்றோர் அவசர அழைப்பு: 0848 35 45 55

பெற்றோர் அவசர அழைப்பின் போது (Elternnotruf) பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வளர்ப்புப் பற்றிய கேள்விகளுக்கு நிபுணர்கள் ஆலோசனை தருவார்கள். இங்கு சொந்தப் பிள்ளையின் அல்லது வேறு பிள்ளைகளின் நடவடிக்கைகளால் பதட்டப்பட்டாலோ அன்றி சுமையாக உணர்ந்தாலோ உதவி பெறலாம். சொந்தப்பிள்ளையோ அல்லது வேறு பிள்ளையோ உடல் / உளரீதியாகத் தவறாகக் கையாளப்படுவதாக அச்சப்பட்டாலும் பெற்றோர் அவசர அழைப்பை நாடலாம். இங்கு பேசப்படுவது நம்பகமானது விருப்பத்தின் பேரில் அநாமதேயமாகக் கையாளப்படும். ஈ மெயில் மூலமும் தொடர்பு கொள்ளலாம். மருத்துவக் கேள்விகளுக்கும் பெற்றோர் அவசர அழைப்பு தொடர்ந்தும் உதவி செய்யும்.

## வீட்டில் வன்முறை (பெண்களுக்கு): 24 மீபநேர அவசர இல. AppElle : 031 533 03 03

பேர்ண், பீல் மற்றும் தூண் பிரதேச பெண்கள் காப்பகம் (Frauenhaus | Maison des femmes) 24 மணி நேரமும் வீட்டு வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு ஆலோசனையும் உதவியும் வழங்குகிறது. அவர்களுக்காக உறவினர்களோ அன்றி நிபுணத்துவம் பெற்றவர்களோ இதனை நாடலாம். இங்கு பேசப்படுவது நம்பகமானது தேவைப்பட்டால் அநாமதேயமாகக் கையாளப்படும். மின்னஞ்சல் மூலமும் தொடர்பு கொள்ளலாம் வீட்டு வன்முறையில் ஆண்கள் பாதிக்கப்பட்டாலும்கூட அது பற்றிய தொடர்பு விபரம் தொடர்ந்த ஆலோசனைகள் பற்றிய விளக்கமான தகவல்களைப் அறிய இணைந்த வாழ்வு மற்றும் பிள்ளைகள் > குழப்பங்கள் பகுதியில் பார்க்கலாம்.

### மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/emergencies-and-counselling-services/emergency-numbers

# ஆலோசனை நிலையங்கள்

சில ஆலோசனை நிலையங்கள் பொதுவான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் சமயம் மற்றைய நிலையங்கள் குறிப்பிட்ட தலைப்புக்கு அல்லது வாழ்வின் பிரச்சனைகளுக்கு மட்டுமே நிபுணத்துவம் பெற்றிருப்பார்கள். இந்த வசதி வாய்ப்புகள் வாழும் பிரதேசத்திற்கேற்ப மாறுபடும் வழமையாக முதலாவது ஆலோசனை இலவசமானது. அதிகமாகத் தொடர்ந்தும் இலவசமாகலாம். அதிகமான இடங்களில் வெளிநாட்டு மொழிகளிலும் ஆலோசனை பெறலாம்.

## பொதுவான ஆலோசனை நிலையங்கள்

பிராந்திய ஒருங்கிணைப்பு தொடர்பு இடம் (AI) (Ansprechstellen Integration | antennes d'intégration) என்பது வெளிநாட்டவர்களுக்கான மத்திய ஆலோசனை நிலையமாகும். இங்கு வேலை செய்பவர்கள் தினமும் எந்நேரமும் பொதுவான கேள்விகளுக்குப் பதிலளிப்பதுடன் அவர்களுக்குத் தேவையான விசேட ஆலோசனை நிலையங்களைத் தேடிக் கொடுப்பார்கள். அதைவிட தேடுபவர்களுக்குப் பொருத்தமான டொச்- அல்லது பிரான்ஸ் மொழி வகுப்புகளையும் உள்வாங்குதல் வசதிவாய்ப்புகளையும் செய்து கொடுப்பார்கள். முதலே பேசி உடன்பட்டால் (தொலைபேசி அல்லது நேரடியாக ) வேற்றுமொழிகளிலும் பேசலாம். முன் அறிவித்தலின்றியும் நேரடியாகப் போய் ஆரம்பத் தகவல்களையும் பெற்று தேவையாயின் ஒரு சந்திப்பிற்கான நேரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தகவல்களும் ஆலோசனையும் இலவசம்.
இதைவிட பொதுவான ஆலோசனை நிலையம், இவ்வாலோசனைகள் குறிப்பிட்ட பிறமொழியில் நடைபெறும் அல்லது குறிப்பிட்ட வாழிடப்பிரிவுக்கு பொறுப்பானதாக இருக்கும். வதியும் கிராமசபைப்பிரிவு அல்லது பிராந்திய ஒருங்கிணைப்பு தொடர்பு இடம் (AI) (Ansprechstellen Integration | antennes d'intégration) இல் இதுபோன்ற ஆலோசனை நிலையத்திற்கும் செல்லலாம். இதைவிட வெளிநாட்டினர் கழகங்களும், முதலாவது தகவல்களை சொந்த மொழியில் வழங்குவதால் ஒரு நல்ல இடமாக உள்ளது.

## கிராமசபை நிர்வாகம் / நகரசபை நிர்வாகம்

அதிகமான சந்தர்ப்பங்களில் வதிவிடங்களின் நிர்வாகங்களே (Gemeindeverwaltung | administration communale, Stadtverwaltung | administration municipale) முதலாவது சிறந்த தொடக்க நிலையமாகும். இங்கு வேலைசெய்பவர்கள் பெரும்பாலான கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் தருவார்கள் அல்லது அதற்கென உள்ள ஆலோசனை நிலையத்திற்குப் பரிந்துரை செய்வார்கள். பேர்ண் மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமசபைகளுக்கும் சொந்தமாக ஒரு இணையத்தளம் உண்டு. அதில் தொடர்பு விபரங்கள், திறந்திருக்கும் நேரங்களும் மேலதிக தகவல்களும் ஆலோசனை மற்றும் உள்வாங்குதல் சம்பந்தமான பிரதேசவாரியான ஒரு பகுதி நிரல்களும் இருக்கும்.

## நிபுணத்துவம் பெற்ற ஆலோசனை நிலையங்கள்

பேர்ண் மாநிலத்தில் ஒரு குறிப்பிட்ட தலைப்பிலோ அல்லது எதாவது வாழ்க்கைப் பகுதியிலோ நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்ட ஆலோசனை நிலையங்களின் வசதிகள் பரந்து காணப்படுகிறது. உதாரணத்திற்குச் சில: வயோதிபர்.தொழில், வதிவிட அனுமதி, கல்வி, திருமணம்/விவாகரத்து, வளர்ப்பு, குடும்பம், நிதி (கடன் / திட்டமிடல் ), சுகாதாரம், வீட்டு வன்முறை, உள்வாங்குதல், உளப்பிரச்சனைகள், சிசுக்கள் பராமரிப்பு, கர்ப்பம், பாலியல்,தீய பழக்கங்களுக்கு அடிமையாதல், சமூகஉதவி சம்பந்தமான கேள்விகள் .இந்த வசதி வாய்ப்புகள் பிரதேசத்திற்கேற்றபடி மாறுபடும். ஒரு பிரதேசத்தில் ஒரு ஆலோசனை நிலையம் இல்லாவிடின் அநேகமாக ஒரு மத்திய ஆலோசனை நிலையம் பேர்ண், தூண் அல்லது பீல் இல் இருக்கும். முதல் ஆலோசனை வழக்கமாக இலவசமானது. ஒரு சில ஆலோசனை நிலையங்களின் தொடர்பு விபரங்கள் தனியான தலைப்புகளில் bern.ch இல் காணலாம். பிராந்திய ஒருங்கிணைப்பு தொடர்பு இடம் (AI) (Ansprechstellen Integration | antennes d'intégration) இலோ அன்றி வதியும் கிராமசபையிலோ பொருத்தமான ஆலோசனை நிலையங்களைத் தேடலாம்.

டொச்- அல்லது பிரான்ஸ் மொழி நன்றாகப் பேசத்தெரியாதவர்களுக்கு ஆலோசனை நிலையத்திற்குப் போக முன்பே மொழிபெயர்ப்பு வசதிகள் பற்றி தகவல் தருவார்கள். ஆலோசனை வேறு மொழிகளில் தரப்படலாம். அன்றி மொழிபெயர்ப்பாளரை ஒழுங்கு செய்து தரப்படலாம். அல்லது சொந்தமாக ஒரு மொழிபெயர்ப்பாளரை அழைத்துவரச் சொல்லலாம்

டொச் மொழி நன்றாகப் பேசத்தெரியாதவர்களுக்கு ஆலோசனை நிலையத்திற்குப் போக முன்பே மொழிபெயர்ப்பு வசதிகள் பற்றி தகவல் தருவார்கள். ஆலோசனை வேறு மொழிகளில் தரப்படலாம். அன்றி மொழிபெயர்ப்பாளரை ஒழுங்கு செய்து தரப்படலாம். அல்லது சொந்தமாக ஒரு மொழிபெயர்ப்பாளரை அழைத்துவரச் சொல்லலாம்

## வரையறையற்ற சட்ட ஆலோசனை

பேர்ண் மாநிலப் பணிப்பின் பெயரில் நடத்தப்படும் பேர்ண் வழக்கறிஞர்கள் சங்கத்தின் (Bernischer Anwaltsverband / BAV | Association des avocats bernois / AAB) சட்ட ஆலோசனை நிலையங்களாகும். இங்கு பேர்ண் மாநிலத்தில் குடியிருப்பவர்களின் சட்டரீதியான கேள்விகளுக்கு (குறுகிய ஆலோசனை) கட்டணமில்லை. ஒழுங்கான இடைவெளிகளில் கதைக்கும் நேரத்தில் அல்லது முதலிலேயே ஒரு நேரம் ஒதுக்கி இங்கு ஆலோசனை நடைபேறும். தரவுகள் அல்லது தகவல்களை இதை இணையத்தளத்தில் பார்த்தோ அன்றி வதியும் கிராமசபையில் கேட்டோ அறிந்து கொள்ளலாம். இங்கு தொலைபேசி மற்றும் எழுத்து மூலமான கேள்விகளுக்குப் பதில் கிடையாதபடியால் நேரில் சென்று கேள்விகளைக் கேட்கவேண்டும். கூடுதலாக இன்னும் வேறு இடங்களிலும் வேறுவகையான தலைப்புகளில் (தொழில் வாழ்க்கை கணவன் மனைவி /குடும்பம்) உதாரணத்திற்குத் தொழிற்சங்கங்களில் இலவசமான சட்ட ஆலோசனைகளைப் பெறலாம். இந்த ஆலோசனைகளுக்கு அதிக நேரம் எடுத்துக்கொள்ளுமானால் வழக்கமாகக் கட்டணத்திற்குரியது. தேவைப்படும் ஆபத்திலிருக்கும் மக்களுக்கான பேர்ண் சட்ட ஆலோசனை மையம் (RBS) மற்றும் சமூக புராட்டஸ்டன்ட் (CSP, பேர்ண் ஜூரா பகுதி) ஆகியவை சுதந்திரமான, இலவச மற்றும் திறமையான சட்ட ஆலோசனை அல்லது பிரதிநிதித்துவத்தையும் வழங்குகின்றன. CSP க்கு மாறாக, RBS புகலிடசட்டம், சமூக பாதுகாப்பு சட்டம் மற்றும் பாகுபாடுகளுக்கு எதிரான பாதுகாப்பு ஆகிய துறைகளில் மட்டுமே ஆலோசனைகளை வழங்குகிறது. பிராந்திய ஒருங்கிணைப்பு தொடர்பு இடம் (AI) (Ansprechstellen Integration | antennes d'intégration). பல்வேறு நிலைகள் பற்றிய தகவல்கள், சில தனிப்பட்ட தாகவல்பிரிவுகளை கொண்டுள்ளது பற்றி bern.சி இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## துவேச அவமதிப்பு

பேர்ண் மாநில சார்பாக இரு ஆலோசனை நிலையங்கள் பேர்ண் குடியிருப்பாளருக்கு இலவச மற்றுன நம்பிக்கையான ஆலோசனைகளை வழங்குகின்றன. இன பாகுபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள், உதவியை எதிபரத்திருக்கும் மக்களுக்கு உதவும் பேர்ண் சட்ட ஆலோசனை மையத்திலிருந்து சட்ட ஆலோசனையைப் பெறுகிறார்கள். gggfon (வன்முறை மற்றும் இனவெறிக்கு எதிராக ஒன்றிணைதல்),ஆலோசனை நிலையம் மோதல் தலையீடு, மத்தியஸ்தம் மற்றும் மத்தியஸ்தம் ஆகியவற்றுடன் தனிப்பட்ட சமூக ஆலோசனைகலை வழங்குகிறது.

## பெண்களுக்கான ஆலோசனை நிலையம்

பேர்ண் மாநிலத்தில் பெண்களுக்கு பல தொடர்பு இடங்கள் உள்ளன. அவர்கள் பல்வேறு தலைப்புகளில் தகவல்களையும் மற்றும் தனிப்பட்ட அல்லது சட்ட கேள்விகளுக்கு ஆலோசனை கூறுகிறார்கள். ஆலோசனை மையத்தைப் பொறுத்து வெவ்வேறு தலைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆலோசனை மையங்கள் திருமணம், சகவாழ்வு, பிரிதல், விவாகரத்து, காவல், பட்ஜெட், ஓய்வூதியம், குடிவரவு சட்டம், மகப்பேறு விடுப்பு, தொழிலாளர் சட்டம், குத்தகை சட்டம், பொது ஒப்பந்த சட்டம் மற்றும் குற்றவியல் சட்டம் பற்றிய தகவல்களை வழங்குகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/emergencies-and-counselling-services/counselling-services